**STARTING TIME 12.42 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 112/2025**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 07.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தனலட்சுமி Husband's Name : குமரேசன்

Address : எண்.28, சக்தியம்மன் கோயில் தெரு, பாலகுப்பம்,
பொன்னை அஞ்சல், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம்.

Age : 22

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனாரான இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதி எனது திருமணத்திற்கு வந்தாரா என்றால், இல்லை. எனது தாயார் காலமானதில் இருந்து எனக்கும், எனது தகப்பனாருக்கும் சுமுகமான உறவு இல்லை என்றால், சரிதான். சமீபத்தில் எனது உறவினரான மாமா ஒருவர் காலமானார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனது பதிலுரையில் 3-வது பத்தியில் சொல்லியுள்ள இறந்து போன ரத்தின ரெட்டியின் மற்ற வாரிசுகளான பாக்கியம்மாள், ராணி, விஜயா, முனுசாமி, மாணிக்கம் மற்றும் மணி ஆகியோருக்கு இவ்வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியும். ரத்தின ரெட்டிக்கு இவ்வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றால், சரிதான். ரத்தின ரெட்டிக்கு சொந்தமான அந்த சொத்துக்கள் கர்நாடகா மாநிலத்தில் உள்ளது என்றால், கர்நாடகா மாநிலத்திலும் உள்ளது, தமிழ்நாட்டிலும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ளதாக சொல்லும் சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால், தாவா சொத்துக்கள்

உள்ள தகரக்குப்பம் கிராமத்திலேயே உள்ளது. தகரக்குப்பம் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் என்ன சொத்துக்கள் என்றால், வீட்டு மனைகளும் உள்ளது, விவசாய நிலங்களும் உள்ளது.

3. எனது பதிலுரையில் 3–வது பத்தியில் சொல்லியுள்ள ரத்தின ரெட்டி வாரிசுகளுக்கிடையே ஒரு வாய்மூல பாகம் ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. ரத்தின ரெட்டிக்கு கர்நாடகா மாநிலத்திலும், தகரக்குப்பம் கிராமத்திலும் உள்ள மற்ற சொத்துக்களை, அவரது வாரிசுகள் வாய்மூலமாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும், அதனால் அவர்களுக்கு இவ்வழக்கு சொத்துக்களில் உரிமை ஏதும் இல்லை என்றால், சரிதான்.

4. என் தகப்பனாருக்கு எந்த காலத்திலும், எந்த வருமானமும் இல்லை என்றால், சரியல்ல, விவசாயம் மூலம் வருமானம் வந்தது. எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால், 2019–ம் ஆண்டு திருமணமானது. எனது தகப்பனார் தாவா சொத்துக்களிலும், ரத்தின ரெட்டியின் இதர சொத்துக்களிலும் விவசாயம் செய்து வந்தாரா என்றால், ஆமாம்.

5. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் என் பெயரில் எழுதிக் கொடுத்த சமயத்தில் நான் இளவராக இருந்தேன் என்றால், சரிதான். அந்த சமயத்தில் எனக்கு எந்த வருமானமும் இல்லை என்றால், சரிதான். என் தகப்பனார் உதாரித்தனமாக செலவு செய்து சொத்துக்களை அழித்து விடுவார் என்பதால், வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தினை என் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால், சரியல்ல, நான் எனது தாய் வழி தாத்தா, பாட்டி வீட்டில் சில காலம் வசித்து வந்தேன், அதனால் என் மீது இருந்த பாசத்தினாலும், எனது வாழ்வாதாரத்திற்கும் எனது தாத்தா மற்றும் பாட்டி அந்த சொத்தை அவர்கள் பணம் கொடுத்து என் பெயரில் வாங்கினார்கள்.

6. எனது அம்மா வழி தாத்தா பாட்டி பெயர் என்னவென்றால், ராமசாமி மற்றும் பூங்காவனம் ஆகும். அவர்கள் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால்,

இல்லை, 2020–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருவரும் காலமாகிவிட்டார். வா.சா.ஆ.2–ல் உள்ள சொத்திற்கான கிரைய பணத்தை எனது அம்மா வழி தாத்தா, பாட்டி கொடுத்தார்கள் என்பதை எனது பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

7. தாவா சொத்தானது எனது தகப்பனாரின் கூட்டுக் குடும்ப வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றதால் அதை என் பெயரில் கிரையம் செய்வதற்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல, தாவா சொத்தை முதலில் எனது தகப்பனார், அவரது தகப்பனாரிடமிருந்து கிரையம் பெற்றார், அதன் பிறகு எனது அப்பாவிடமிருந்து எனது அம்மா வழி தாத்தா, பாட்டி என் பெயரில் கிரையம் வாங்கினார்.

8. வாதி அவரது வழக்குரையில் பத்தி–5–ல் தாவா சொத்தை கூட்டுக் குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கியது என சொல்லியுள்ளதை நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால், சரியல்ல, மறுத்துள்ளேன்.

9. தகரக்குப்பம் கிராமத்தில் எனது தாத்தா ரத்தின ரெட்டிக்கு சொந்தமாக இருந்து பாகம் பிரிக்கப்படாமல் உள்ளதாக சொல்லும் மற்ற சொத்துக்களுக்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தானது எனது தகப்பனார், வாதி மற்றும் எனக்கும் பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்து என்றால், சரியல்ல. எனவே, வாதி வழக்கில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது.

1–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 01.10 P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.07 13:42:22 +0530